**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 33/2025**

**Prosecution Witness : 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. இளஞ்செழியன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. சங்கர்** | **Calling** | : | **நிலக்கோட்டை உட்கோட்ட துணைக் காவல் கண்காணிப்பாளர்** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **தேனி** | **Age** | : | **54** |
| | | | **Dated** | : | **25.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**5 முதல் 7 வரையிலான எதிரிகள் ஆஜர். 1 முதல் 4 வரையிலான எதிரிகள் ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 7 (பட்டியல் சாட்சி 16), **திரு. இளஞ்செழியன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் தற்போது நிலக்கோட்டை உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.07.2022ம் தேதி நான் திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக

பணிபுரிந்த போது, அன்றைய தினம் 18.30 மணிக்கு உதவி ஆய்வாளர் திரு. கணேசன் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது, மாலை 05.00 மணிக்கு திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருந்து வரப்பெற்று தகவலைப் பெற்று, அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த செந்தில்குமார் என்பவர் மயக்க நிலையில் இருந்ததால், அவருக்கு துணையாக இருந்த அவருடைய மனைவி பூங்கொடி என்பவரை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பெற்றுள்ளார். **மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் நிலைய குற்ற எண். 170/2022, சட்டப்பிரிவு 307 இ.த.ச. வின் படி வழக்கு பதிவு செய்துள்ளார். அவர் பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி வழக்கு கோப்பை மேல் விசாரணை செய்வதற்காக எனது பார்வைக்கு வைத்தார். அன்றைய தினமே 20.00 மணிக்கு நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடமான ராமர்பிள்ளைத்தோப்பு, பூங்கொடி வீட்டின் முன்பாக சென்று சாட்சிகள் முருகன் மற்றும் கண்ணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, சம்பவ இடத்தை விளக்கும் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். **நான் தயார் செய்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5 மற்றும் பார்வை மகஜர் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகின்றன**. இவ்வழக்கு சாட்சிகளான பூங்கொடி, செந்தில்குமார், முத்துப்பாண்டி, சிவக்குமார், பழனியம்மாள், ஆரோக்கியம்மாள், முருகன் மற்றும் கண்ணன் ஆகியோர்களை தனித் தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்து கொண்டேன். பின்னர் 27.07.2022ம் தேதி காலை 07.00 மணிக்கு தகவலின்பேரில் மேட்டுப்பட்டி, MGR நகர் தெற்கே உள்ள மாமூ தோட்டக்கிணறு பம்புசெட் அருகே இவ்வழக்கு எதிரிகளான

மாதவன், விக்னு என்ற விக்னேஷ், கார்த்திகேயன், முகேஷ்குமார் மற்றும் பிரவீன்குமார் ஆகியோர்களை காரணம் கூறி கைது செய்தும், எதிரி மாதவன் என்பவரை விசாரித்தபோது, அவர் சாட்சிகள் முருகன் மற்றும் அகஸ்டின் அமல்ராஜ் ஆகியோர் முன்னிலையில் எவ்வித வற்புறுத்தலும், துண்டுதலும் இன்றி தன்னிச்சையாக ஓர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் மேற்படி குற்றச் சம்பவத்தை நானும், எதிரிகளும் சேர்ந்து செய்ததாக சம்பவத்திற்கு பயன்படுத்திய அருவாள் மற்றும் கத்திகள் மற்றும் TN 57 BJ 8062 Suzuki இருசக்கர வானத்தையும், ஆயுதங்களை அருகில் உள்ள முட்புதரில் மறைத்து வைத்துள்ளோம் என்றும், அதை எடுத்து ஆஜர் செய்வதாகவும் கூறினார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அன்றைய தினமே காலை 09.00 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் மேட்டுப்பட்டி, MGR நகருக்கு தெற்கே உள்ள மாமூ தோட்டக்கிணறு பம்புசெட் அருகே எதிரி மாதவன் எடுத்து ஆஜர் செய்த மற்றும் TN 57 BJ 8062 Suzuki இருசக்கர வானத்தையும், சுமார் 32 ½ செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி – 1 யையும் 41 ½ செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய அருவாள் – 1 யையும், 33 செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி – 1 யையும், 30 செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி – 1 யையும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். **மேற்படி கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எதிரிகள் மாதவன், விக்னு என்ற விக்னேஷ், கார்த்திகேயன், முகேஷ்குமார் மற்றும் பிரவீன்குமார் ஆகியோர்களை தக்க வழிக்காவல் மூலமாக நீதிமன்ற காவலுக்கு உட்படுத்திக் கொண்டேன். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான முருகன் மற்றும் அகஸ்டின் அமல்ராஜ் ஆகியோரை

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டேன். பின்னர் 16.08.2022ம் தேதி இவ்வழக்கின் தலைமறைவு எதிரியான விஷ்வா என்பவரை குடைப்பாறைப்பட்டி காவல் சோதனை சாவடி அருகே காலை 05.30 மணிக்கு வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது, TN 59 AS 8327 பதிவு எண் கொண்ட எமஹா இருசக்கர வாகனத்தில் வந்தவரை காரணம் கூறி கைது செய்து, விசாரணை செய்தபோது, அவர் எவ்வித வற்புறுத்தலும், தூண்டுதலுமின்றி சாட்சிகள் வீரபாண்டி, ராஜ்குமார் ஆகியோர் முன்னிலையில் தன்னிச்சையாக ஓர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் மற்ற எதிரிகளுடன் சேர்ந்து குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாகவும், குற்ற சம்பவத்தின்போது மேற்படி இருசக்கர வாகனத்தை எடுத்துச் சென்றதாகவும், அந்த வாகனத்தை ஆஜர் செய்வதாகவும் கூறினார். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அன்றைய தினமே காலை 07.30 மணிக்கு அதே இடத்தில் அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி ஆஜர் செய்த TN 59 AS 8327 எமஹா இருசக்கர வாகனத்தை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிக் கொண்டேன். மேற்படி கைப்பற்றுதல் **அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான வீரபாண்டி, ராஜ்குமார் ஆகியோரை விசாரித்து தனித் தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் மற்றொரு எதிரியான பரத் என்பவர் நீதிமன்ற முன்பிணையில் சென்றுவிட்டார். மேற்படி வழக்கு சொத்துக்களை தனித்தனியே படிவம் – 91ன் மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். TN 57 BJ 8062 Suzuki இருசக்கர வாகனம், சுமார் 32 ½ செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி – 1, 41 ½ செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய அருவாள் – 1, 33 செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி – 1,

30 செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி – 1 ஆகியவற்றின் **படிவம் – 91 அ.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. TN 59 AS 8327 எமஹா இருசக்கர வாகனத்தின் **படிவம் – 91 அ.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள இருசக்கர வாகனங்கள் எதிரிகளிடம் இருந்து நான் கைப்பற்றியவை. TN 57 BJ 8062 மூன்று எண்ணிக்கைகள் கொண்ட இருசக்கர வாகனத்தின் புகைப்படங்களின் வரிசை **சா.பொ. 1**, சுமார் 32 ½ செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி – 1 **சா.பொ. 2**, சுமார் 41 ½ செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி – 1 **சா.பொ. 3**, 33 செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி – 1 **சா.பொ. 4** மற்றும் 30 செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி – 1 **சா.பொ. 5** மற்றும் TN 59 AS 8327 எமஹா இருசக்கர வாகனத்தின் இரண்டு எண்ணிக்கைகள் கொண்ட புகைப்படங்களின் வரிசை **சா.பொ. 6** ஆக குறியீடு செய்யப்படுகின்றன. 02.11.2022ம் தேதி வாதிக்கு சிகிச்சை அளித்து, மருத்துவச்சான்று வழங்கிய அரசு மருத்துவர்கள் திரு. கணேஷ்குமார் மற்றும் திரு. வசந்த் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டேன். **திண்டுக்கல் அரசு மருத்துவமனை மருத்துவர் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ. 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மதுரை அரசு மருத்துவமனை மருத்துவர் வழங்கிய **காயச்சான்றிதழ் அ.சா.ஆ. 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சார்பு ஆய்வாளர் திரு. கணேசன் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டேன். பின்னர் இவ்வழக்கு விசாரணையில் குற்ற சம்பவத்தின் 5–க்கும் மேற்படி நபர்கள் ஆயுதங்களுடன் குற்ற செய்கையில் ஈடுபட்டு இருந்ததால், வழக்கு சட்டப்பிரிவுகளை 307, 147, 148, 341 இ.த.ச.வாக பிரிவுகள் மாறுதல் செய்து

சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் எனது புலன் விசாரணையை முடித்துக் கொண்டு வழக்கு எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 307, 147, 148, 341 இ.த.ச.வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>5-ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

முதல் விசாரணையில் சொன்னது போன்று, சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில் அசா. 1 புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. புகார் மனு பின்னிட்டு வழக்கிற்காக தயாரிக்கப்பட்டு உள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னது போன்று சாட்சிகள் 161 குவிமுச வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், பின்னிட்டு வழக்கிற்காக தயார் செய்யப்பட்டு உள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் காயச்சான்றிதழில் அடையாளம் தெரியாத நபர்களால் தான் தாக்கப்பட்டுள்ளதாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்னது போன்று சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில், எவ்வித சம்பவமும் நடக்கவில்லை என்றும், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வழக்கு சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும், எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும், ஒப்புதல் வாக்கமூலம் பெறவில்லை என்றாலும், சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வி156 த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் பொய்யாக காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கினை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

(5-ம் எதிரி குறுக்கு விசாரணை இதர எதிரிகள் தரப்பில் தம்முடையதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது)

Taken down by me/before me in open court on 25.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.03.25 15:01:20 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.